உ

சிவமயம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான திருக்கடவூர்

# அருள்மிகு அபிராமி அம்மன் உடனாகிய
# அருள்மிகு அமிர்தகடேஸ்வரர் சுவாமி
# தேவஸ்தானம்

1434-ம் பசலி



## சித்திரை திருவிழா பத்திரிக்கை






உ

ஸ்ரீ அபிராமி அம்மன் துணை

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான திருக்கடவூர்

# ஸ்ரீ அமிர்தகடேஸ்வரர் சுவாமி தேவஸ்தானம் ஸ்ரீ விசுவாவசு வருடம் சித்திரை மாதம் சைத்ர மகோற்சவ பத்திரிக்கை

பாலனுக் காயன்று பாற்கடல் ஈந்து பணைநெருங்க
ஆலினிற் கீழிருந் தாரண மோதி அருமுனிகாய்ச்
சூலமும் பாசமுங் கொண்டு தொடர் தடர்ந் தோடி வந்த
காலனைக் காய்ந்த பிரான் கடவூருறை உத்தமனே. - அப்பர்

தனந்தரும் கல்விதரும் ஒருநாளும் தளர்வு அறியா
மனம் தரும் தெய்வ வடிவும்தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனம்தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே
கனம்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே. - அபிராமி பட்டர்.

திருக்கடவூர் என்னும் இத்திருத்தலம் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய இம்மூவர்களும் அருளிய திருப்பதிகங்களைப் பெற்று விளங்குவது. தேவர்களும் அசுரர்களும் கொண்டுவந்த அமுதகடம் இங்கு வைக்கப்பெற்ற போது அமுதகடமே சிவலிங்க வடிவமாக அமைந்தமையின் இத்தலம் கடவூர் எனப்பெயர் பெற்றது. இறைவனும் ஸ்ரீ அமிர்தகடேசுவரர் எனப் பெயர் பெற்றார். மார்க்கண்டேயர் இங்கு இறைவனைப் பூசிக்கின்ற போது, உயிர்கவரவந்த இயமனை இறைவன் சம்ஹரித்தருளியதால் அட்டவீரட்டத் தலங்களுள் ஒன்றாக அமைந்துள்ளது. குங்கிலியக்கலயநாயனார், காரியநாயனார் ஆகியோர் திருவவதாரம் செய்து அருளியது. ஸ்ரீ அபிராமி அம்மனின் அருள்பெற்ற அபிராமி பட்டர் அந்தாதிபாடி அரசனுக்கு அமாவாசையைப் பௌர்ணமியாக்கிக் காட்டிய சிறப்புடையது.

இத்தலத்தில் கார்த்திகைச் சோமவாரங்களில் சங்காபிஷேகம் மிகச்சிறப்பாக நடைபெறுகிறது. ஸ்ரீ காலசம்ஹாரக்கடவுள் இங்கு எழுந்தருளி இருப்பதால் அன்பர்கள் பலர் இன்றும் 60 ஆண்டு நிறைவுவிழா, ஆயுள்ஹோமம், மிருத்யுஞ்ஜெயசாந்தி முதலியவற்றை இங்கு வந்து செய்து இறைவனை வழிபட்டு நலம் பெற்று வருகின்றனர். இத்தகைய சிறப்புடைய இத்தலத்தில் எழுந்தருளி அருள்வழங்கும் ஸ்ரீ அபிராமியம்பாள் உடனாகிய ஸ்ரீ அமிர்தகடேஸ்வர சுவாமிக்குச் சைத்ர மகோற்சவம் கீழ்க்காணுமாறு சிறப்பாக நடைபெறும். உற்சவ நாட்களில் சமயச் சொற்பொழிவுகளும், வேதபாராயணமும், திருமுறைப்பாராயணமும் நிகழும் அன்பர்கள் வந்து தரிசித்து இறையருள் பெற்று உய்வார்களாக.

**அஷ்ட வீரட்டம் நடந்த ஊரும் சிறப்பும்**

| | |
|---|---|
| 1. திருக்கண்டியூர் | - பிர்மன் சிரசைக் கிள்ளியது |
| 2. திருக்கோவிலூர் | - அந்தகாசுரவதம் |
| 3. திருவதிகை | - திரிபுரம் எரித்தது |
| 4. திருப்பறியலூர் | - தட்ச சம்ஹாரம் |
| 5. விற்குடி | - சலந்திர சூரன் சம்ஹாரம் |
| 6. திருக்குறுக்கை | - மன்மத தகனம் |
| 7. வழுவூர் | - யானைத் தோலைக் கிழித்துப் போர்த்தியது |
| 8. திருக்கடவூர் | - எமனையே சம்ஹரித்தது |

**காலசம்ஹாரமூர்த்தி மாதாந்திர அபிஷேக விபரம்**

| | |
|---|---|
| 1. சித்திரை விஷு | உச்சிகால அபிஷேகம் |
| 2. ஐந்தாம் திருவிழா படி இறங்குதல் | உச்சிகால அபிஷேகம் |
| 3. ஆறாம் திருநாள் ஸ்ரீ காலசம்ஹார மூர்த்தி வீர நடன காட்சியும்100 கால் மண்டபத்தில் | உச்சிகால அபிஷேகம் |
| 4. உத்சவ பிராயச்சித்தம் | உச்சிகால அபிஷேகம் |
| 5. ஆனி திருமஞ்சனம் (உத்திரம்) | உச்சிகால அபிஷேகம் |
| 6. தக்ஷிணாயனபுண்யகாலம் (அயனம்) ஆடி மாதம் | உச்சிகால அபிஷேகம் |
| 7. கன்யா சதுர்த்தசி (திதி) விசேஷ 2ம் காலம் இரவு | 2 ஆம் கால அபிஷேகம் |
| 8. துலாவிஷு ஐப்பசி | உச்சிகாலம் |
| 9. ஆருத்ரா | காலசந்தி |
| 10. தனுர்வியதீ பாதம் | காலசந்தி |
| 11. உத்திராயண புண்யகாலம் | உச்சிகாலம் |
| 12. கும்ப சதுர்தசி இரவு | 2ஆம் காலம் |





## 1 ஆம் திருநாள்

ஸ்ரீ விசுவாவசு ஞு சித்திரை மீ18 உ
(01.05.2025) வியாழக்கிழமை
மாலை மணி 5.30 க்குமேல் 7.30 க்குள்
துலா லக்னத்தில்

### பஞ்ச-முக துவஜா ரோஹணம்

இரவு 9.00 மணி அளவில்

### பஞ்ச மூர்த்திகள் திரு வீதி உலா

மாலை 6.30 மணி **பரதநாட்டியம்**
திருக்கடையூர் இசைப்பள்ளியினர்கள்

இரவு 7.30 மணி **பரதநாட்டியம்**
நிருத்யக்ஷேத்ரா கோயம்புத்தூர்.
குரு.டாக்டர் ரேவதி ஆனந்தகுமார்

## 2 ஆம் திருநாள்

ஸ்ரீ விசுவாவசு ஞு சித்திரை மீ19 உ
(02.05.2025) வெள்ளிக்கிழமை
இரவு 9.00 மணியளவில்

### பஞ்சமூர்த்திகள் பூத வாகனத்தில் எழுந்தருளி வீதியுலா

சிறப்பு சொற்பொழிவு தலைப்பு :
**"கச்சியப்ப முனிவர்"**
திருமதி.சி.தேன்மொழி தமிழாசிரியை
ஸ்ரீ குரு ஞானசம்பந்தர் மேல்நிலைப்பள்ளி.
தருமபுரம்.

மாலை 6.30 மணி **பரதநாட்டியம்**
ஆச்சார்யா ஸ்ரீமதி.திவ்யசேனா
திவ்யாஞ்சலி நாட்டியப்பள்ளி சென்னை.

இரவு 7.30 மணி **பரதநாட்டியம்**
ஆசார்யா திரு.ஷபின் பிரைட்
நிருத்யஷாந்தி நாட்டியப்பள்ளி திருச்சிராப்பள்ளி.





## 3 ஆம் திருநாள்

ஸ்ரீ விசுவாவசு ஞு சித்திரை மீ20 உ (03.05.2025) சனிக்கிழமை
மாலை மணி 6.30 க்குமேல் 8.00 க்குள் விருச்சிக லக்னத்தில்
ஸ்ரீ அபிராமி அம்பாள் சமேத ஸ்ரீ அமிர்தகடேஸ்வரசுவாமிக்கு

# திருக்கல்யாணம்



இரவு 10.00 மணி அளவில் **ஏகாந்த சேவை**

சிறப்பு சொற்பொழிவு தலைப்பு :
**"நக்கீரர்"**
திரு.சொ.வைத்தியநாதன் தமிழாசிரியர்
ஸ்ரீ குரு ஞானசம்பந்தர் மேல்நிலைப்பள்ளி.
தருமபுரம்.

மாலை 6.30 மணி **பரதநாட்டியம்**
பரதநாட்டியாலயா, சென்னை.
குரு.கலைச்சுடர் திருமதி.லதா ரவி

இரவு 7.30 மணி **பரதநாட்டியம்**
சித்ரமாயா கலைக்கூடம்
குரு.திருமதி.கிருஷ்ணப்பிரியா ஜெயகர்



## 4 ஆம் திருநாள்

ஸ்ரீ விசுவாவசு ஷு சித்திரை மீ 21 உ
(04.05.2025) ஞாயிற்றுக்கிழமை

# "திருமுறை விழா"



இரவு 9.00 மணி அளவில்

# யானை வாகன காட்சி

சிறப்பு சொற்பொழிவு தலைப்பு :
**"சிவப்பிரகாசர்"**
திருமதி.சாந்தி அகோரம் தமிழாசிரியை
ஸ்ரீ குருஞானசம்பந்தர் தொடக்கப்பள்ளி
தருமபுரம்.

மாலை 6.30 மணி **பரதநாட்டியம்**
நிருத்தியக்க்ஷேத்ரா நடனப்பள்ளி, சென்னை.
குரு.கலைமாமணி மதுரை திரு.முரளிதரன்
மற்றும் திருமதி சித்ரா முரளிதரன்

இரவு 7.30 மணி **பரதநாட்டியம்**
அக்ஷயா ஆர்ட்ஸ் அகாடமி
குரு.கலைமாமணி ஸ்ரீ பினேஷ் மகாதேவன்





## 5 ஆம் திருநாள்

ஸ்ரீ விசுவாவசு ஷு சித்திரை மீ 22 உ (05.05.2025) திங்கட்கிழமை
காலை மணி 9.00 க்குமேல் 10.00 க்குள் மிதுன லக்னத்தில்

# ஸ்ரீ காலசம்ஹாரமூர்த்தி ஆஸ்தான மண்டபத்திலிருந்து மகா மண்டபத்திற்கு எழுந்தருளல்



இரவு

# ரிஷப வாகன காட்சி, சகோபுர தரிசனம்

சிறப்பு சொற்பொழிவு தலைப்பு :
**"பரஞ்ஜோதி முனிவர்"**
முனைவர் **M.நவமணி** உதவிப்பேராசிரியர்
எஸ்.கே.எஸ்.எஸ் கல்லூரி, திருப்பனந்தாள்.

மாலை 6.30 மணி **பரதநாட்டியம்**
ஆச்சாரிய கலா நிபுணா **ஸ்ரீ நந்தினி செல்வராஜ்**
பொற்சபை அருங்கலைகளின் ஆலயம், கோவை.

இரவு 7.30 மணி **பரதநாட்டியம்**
அபியநயா டான்ஸ் அகாடமி
குரு.Dr.K.உமாமகேஸ்வரி



## 6 ஆம் திருநாள்

ஸ்ரீ விசுவாவசு ஞு சித்திரை மீ 23 உ (06.05.2025) செவ்வாய்கிழமை
காலை மணி 8.00 க்குமேல் 9.00 க்குள் மிதுன லக்னத்தில்

**ஸ்ரீ பாலாம்பிகா சமேத ஸ்ரீ காலசம்ஹாரமூர்த்தி மகா மண்டபத்திலிருந்து நூற்றுக்கால் மண்டபத்திற்கு எழுந்தருளுகின்ற**

# வீரநடன தரிசனம்

இரவு 9.00 மணி அளவில்



# காலசம்ஹார திருவிழா



சிறப்பு சொற்பொழிவு தலைப்பு :
**"கால சம்ஹாரம் வருணனை"**
வே.இராஜலிங்கம் தமிழாசிரியர்
ஸ்ரீ குருஞானசம்பந்தர் மெட்ரிக்
மேல்நிலைப்பள்ளி, மயிலாடுதுறை.

மாலை 6.30 மணி **பரதநாட்டியம்**
வாஹாறிபேட்டை திரு.சீனிவாசன் முரளி அவர்களின்
ஸ்ரீஓம் பத்மினி நிருத்யகலா நிகேதன்


இரவு 7.30 மணி **பரதநாட்டியம்**
நாட்டிய சுடரொளி உ.மஹாலெட்சுமி ரவிச்சந்திரன் M.F.A.,
ஸ்ரீ மஹா நாட்டியாலயா, விஷ்ணுபுரம்.



## 7 ஆம் திருநாள்

ஸ்ரீ விசுவாவசு ஞு சித்திரை மீ 24 உ
(07.05.2025) புதன்கிழமை
இரவு மணி 8.00 க்குமேல் 9.00 க்குள்
விருச்சிக லக்னத்தில்

# ஸ்ரீ பஞ்சமூர்த்திகள் ரதாரோஹணம்



சிறப்பு சொற்பொழிவு தலைப்பு :
**"குமரகுருபரர்"**
முனைவர்.S.முத்துலெட்சுமி
உதவிப்பேராசிரியர்
எஸ்.கே.எஸ்.எஸ் கல்லூரி, திருப்பனந்தாள்.

மாலை 6.30 மணி **பரதநாட்டியம்**
இந்திஷா பைன் ஆர்ட்ஸ், சென்னை.
நிறுவியோர்.நதீஷ் மற்றும் இந்து நிதீஷ்

இரவு 7.30 மணி **பரதநாட்டியம்**
ஸ்ரீமதி.அர்ச்சனா கார்த்திக்
காம கால அபிநவ கேந்திரா, சென்னை.

## 8 ஆம் திருநாள்

ஸ்ரீ விசுவாவசு ஞு சித்திரை மீ 25 உ
(08.05.2025) வியாழக்கிழமை
காலை மணி 8.00 க்குமேல் 9.00 க்குள்

# தேர்த்திருவிழா

மாலை 6.30 மணி **பரதநாட்டியம்**
ஸ்ரீ த்யான முத்ரா, பரதநாட்டிய அகாடமி பட்டாளம்
குரு திருமதி.தேவி ரஞ்சித்குமார்

இரவு 7.30 மணி **பரதநாட்டியம்**
சாய்முத்ரா நாட்டியபள்ளி, சென்னை.
குரு திருமதி.உமா தினேஷ்

ஸ்ரீ விசுவாவசு ஞு சித்திரை மீ 29 உ (12.05.2025) திங்கட்கிழமை

# தெப்பத்திருவிழா

சிவாச்சாரியார்கள் கவனத்திற்கு.
சித்திரை திருவிழாவை முன்னிட்டு.
23-04-2025 முதல் 30-04-2025 வரை
உச்சிக்கால அபிஷேகம் மட்டும்
உபய அபிஷேகம் உண்டு.
01-05-2025 முதல் 10-05-2025 வரை
உபய அபிஷேகம் கிடையாது.

இப்படிக்கு
கண்காணிப்பாளர்
C மணி Bsc